***கவனிக்க.-** 2022.05.20 ஆந் திகதிய 2281 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I: தொகுதி II (அ), பகுதி II, பகுதி III, பகுதி IV(அ) பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2282 - 2022 මැයි මස 27 වැනි සිකුරාදා - 2022.05.27**

*2282 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | 184 |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 184 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 137 |


**கவனிக்க.-** (i) *அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தம் சட்டமூலம் 2022, மே 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *அரசியலமைப்புக்கான இருபத்தியிரண்டாவது திருத்தம் சட்டமூலம், 2022, மே மாதம் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2022, யூன் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, யூன் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


183 - B 082349 - 353 (2022/05)

# காணி சீர்திருத்த ஆணைக்குழு அறிவித்தல்கள்

## 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணிச் சீர்திருத்த சட்டத்தின் 19 ஆவது பிரிவின்கீழ் நியதிச்சட்ட தீர்ப்புகளை வர்த்தமானியில் வெளியிடுதல்

*அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணிச் சீர்திருத்த சட்டத்தில் 18 ஆவது பிரிவின் பிரகாரம் இந்த ஆணைக்குழுவிடம் நியதிச்சட்ட வெளிப்படுத்தல்களை சமர்ப்பித்துள்ள, ஆயினும் குறித்த சட்டத்தில் 19 ஆவது பிரிவின் பிரகாரம் நியதிசட்ட தீர்ப்புகளை வர்த்தமானியில் வெளியிடப்படாத நபர்கள் அல்லது அவர்களின் உரித்தாளிகள் தமது உடைமையுரிமை அல்லது உரித்தினை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களுடன் பின்வரும் முகவரியில் அமைந்துள்ள காணிச் சீரதிருத்த ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் காணி உச்சவெல்லை பிரிவிடம் 2022 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் வருகை தருமாறு அறிவிக்கின்றேன்.*

*நிலந்த விஜேசிங்க் சட்டத்தரணி ,*
*தலைவர்,*
*காணிச் சீர்திருத்த ஆணைக்குழு.*

*இலக்கம் 475,*
*கடுவளை வீதி,*
*பத்தரமுல்லை,*
*2022.05.10.*

*05-223*

---

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்

*இணைப்பு - 09*

## காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*மத்திய மாகாண சபையின் நுலரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) ஏ. ஏ. விதுர சம்பத் ஆகிய நான் காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1995, ஒகத்து 21 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/ நுவரெலியா/539 ஆம் இலக்க அளிப்புபத்திரத்தின் உரிமையாளரான ஆக்கரப்பத்தனை என்னும் முகவரியில் வசிக்கும் திரு. நாமபந்து பின்னதுவ என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் நுவ 21/440/95 இலக்கத்தின் கீழ் 1995/11/13 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தினால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 17.06.2022 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

### மேற்கூறிய அட்டவணை

*நுவரெலியா நிருவாக மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் திம்புளை பற்றிலுள்ள/ கோரளையிலுள்ள 475/I ஆக்கரப்பத்தனை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஹோல்புருக் என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும் - பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட - ஆம் இலக்க வெளிக்களத் தாளில் மு. பி. நு. 1144 ஆம் இலக்க வரைபடத்தில் - இரேகை வரைதாளில் 02 ஆம் இலக்கக் காணித்துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் ஹெக்டயார்/ஏக்கர் 0.098 ரூட் - விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித் துண்டு:*

*வடக்கு : அக்கிராஓய ஒதுக்கப்பட்ட காணி;*

கிழக்கு : அக்கிராஒய ஒதுக்கப்பட்ட காணி ;
தெற்கு : துண்டு இலக்கம் 07;
மேற்கு : வீதிக்கான ஒதுக்கப்பட்ட காணி.

ஏ. ஏ. விதுர சம்பத்,
பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர்
(மாகாணங்களுக்கு இடைப்பட்ட).

நுவரெலியா,
*2021.11.06.*

*05-217/1*

---

இணைப்பு - *09*

## காணி அபிவிருத்திக்கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) ஏ.ஏ.விதுர சம்பத் ஆகிய நான் காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1995, நவெம்பர் 30 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/நுவ/744 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான ரத்னகிரிய, லெமலியர் தோட்டம் என்னும் முகவரியில் வசிக்கும் திரு. ரணசிங்க பப்பிலிஸ் செனெவிரத்ன என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் நுவ/34/1615/96 இலக்கத்தின் கீழ் 1996.04.01 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தினால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 17.06.2022 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

### மேற்கூறிய அட்டவணை

*நுவரெலியா நிருவாக மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் திம்புளை பற்றிலுள்ள/கோரளையிலுள்ள ரத்னகிரிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த லெமலியர் தோட்டம் என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நுவரெலியா பிரதேச செயலாளர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட - இலக்க வெளிக்களத் தாளில் நுவி/81/89 ஆம் இலக்க வரைபடத்தில் - இரேகை வரைதாளில் 196 ஆம் இலக்கக் காணித் துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் ஹெக்டயார்/ஏக்கர் ரூட் 01 விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு:*

வடக்கு : வீதி;
கிழக்கு : துண்டு இலக்கம் 195 ;
தெற்கு : எச். எம். அவர்களின் காணி;
மேற்கு : வீதி.

ஏ. ஏ. விதுர சம்பத்,
பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர்
(மாகாணங்களுக்கு இடைப்பட்ட) நுவரெலியா.

நுவரெலியா,
*2021.12.31.*

*05-217/2*

இணைப்பு - 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

*மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) ஏ. ஏ. விதுர சம்பத் ஆகிய நான் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1995, மாச்சு 25 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள நு/ஏ/5/பிர/5323 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான, ஆக்கரப்பத்தனை ஹோல்புரூக் என்னும் முகவரியில் வசிக்கும் திரு. ரனேபுரகே ஹரமானிஸ் என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் நுவ 6/551/88 இலக்கத்தின் கீழ் 1988, மே 09 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தினால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கபடவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 17.06.2022 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**மேற்கூறிய அட்டவணை**

*நுவரெலியா நிருவாக மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் திம்புளை பற்றிலுள்ள/கோரளையிலுள்ள 475/I ஆக்கரப்பத்தனை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஆக்கரப்பத்தனை என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும் - பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட - ஆம் இலக்க வெளிக்களத் தாளில் மு. பி. நு. 939 ஆம் இலக்க வரைபடத்தில் - இரேகை வரைதாளில் 31 ஆம் இலக்கக் காணித்துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் ஹெக்டயார்/ஏக்கர் 0.091 ரூட் - விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித் துண்டு:*

*வடக்கு : வீதி;*
*கிழக்கு : பிரென்கட்டன் தோட்டம்;*
*தெற்கு : பி. பி. நு. 939 இல் துண்டு இலக்கம் 27;*
*மேற்கு : வீதி.*

*ஏ. ஏ. விதுர சம்பத்,*
*பிரதேச செயவாளர்/பிரதிக் காணி ஆணையாளர்,*
*நுவரெலியா.*

*நுவரெலியா,*
*2021.11.06*

*05-217/3*

---

இணைப்பு - 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

*மத்திய மாகாண சபையின் நுலரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) ஏ. ஏ. விதுர சம்பத் ஆகிய நான் காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1995, மாச்சு 21 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/நுவ/448 ஆம் இலக்க அளிப்புபத்திரத்தின் உரிமையாளரான பங்கலாஹத, நுவரெலியா என்னும் முகவரியில் வசிக்கும் சௌவுந்திர ஹெந்திகே விஜயதாச என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாவட்ட பதிவாளர், அலுவலகத்தில் நுவ/23/15/95 இலக்கத்தின் கீழ் 1995.05.30 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தினால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க*

விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 17.06.2022 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**மேற்கூறிய அட்டவணை**

நுவரெலியா நிருவாக மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் ஒய பலாத்த பற்றிலுள்ள/ கோரளையிலுள்ள பங்கலாஹத கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பங்கலாஹத என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும் - பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட - ஆம் இலக்க வெளிக்களத் தாளில் முபி. நு. 978 ஆம் இலக்கம் கொண்ட துண்டுகள் பிரிக்கும் வரைபடத்தில் 19 ஆம் இலக்கக் காணித் துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் ஹெக்டயார்/ஏக்கர் 0.102 ரூட- விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித் துண்டு:

வடக்கு : மு. பி. நு. 978 வரைபடத்தில் வீதி;
கிழக்கு : மு. பி. நு. 978 வரைபடத்தில் வீதி மற்றும் துண்டு இலக்கம் 21;
தெற்கு : மு. பி. நு. 978 வரைபடத்தில் துண்டு இலக்கம் 21 மற்றும் வீதிக்காக ஒதுக்கப்பட்ட காணி;
மேற்கு : மு. பி. நு. 978 வரைபடத்தில் வீதிக்காக ஒதுக்கப்பட்ட காணி.

ஏ. ஏ. விதுர சம்பத்,
பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர்,
நுவரெலியா.

நுவரெலியா,
2021.10.19

05-217/4

## நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/63348.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : என்சிபி/பிஎல்சி/ எல் 03/ரிஎல்/04.

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், தலாவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 405, மொரகொட கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மொரகொட எனும் கிராமத்தில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நில அளவையாளரினால் தயாரிக்கப்பட்ட சுவடு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 03 ஏக்கர், 01 றூட், 47 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு சிலெக்ஸ் சோலா பவர் திரப்பனே (பிறைவேட்) லிமிட்டட் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : அரச காணி;
கிழக்கு : திரு. ஆர். ஜி. கருணாசேன மற்றும் திருமதி என். எம். சி. குமாரிஹாமி உரிமைகோரும் காணித்துண்டு ;
தெற்கு : மின்சாரக் கம்பிக்கான வீதி மற்றும் ஒதுக்கு;
மேற்கு : வீதி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2022.02.16 ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.**- 2022 ஆம் வருடத்துக்கான காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ஐந்து மில்லியனுக்கு (ரூ. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 2%, 2022 ஆம் வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா 5 மில்லியனுக்கு (ரூ.5,000,000) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுக்கப்படல் வேண்டும். இந்தக் குத்தகைப் பணம் 5 வருடங்களுக்கு ஒரு முறை

திருத்தப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணம் அதன் முந்தைய ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% முடிந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) தவணைப் பணம்: தவணைப் பணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின், மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படக் கூடாது;

(உ) பிரதேச செயலாளர், மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2022.02.16 ஆந் தினத்திலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் நிறைவு பெறும் வரை இந்தக் குத்தகை பெறப்பட்ட நோக்கத்தை நிறைவு செய்கின்ற கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் மட்டுமே அனுமதிக்கப்படும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

டி. டி. நவோத்யா சி. கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.04.30.

05- 219

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/43871.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : என்சிபி/பிஎல்சி/ எல் 07/10/4/2.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், நகெனஹிர நுவரகம் பலாத பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 249, கட்டம் II கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஹரிஸ்சந்திர மாவத்த எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் எப். ரீ. பி. ஏ. 02 இன் காணித்துண்டு இலக்கம் 103 இன் ஒரு பகுதி எனக் காட்டுவதற்கு வரையப்பட்ட 2015/06 ஆம் இலக்க சுவடு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.0780 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை சமிதியின் நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு அகில இலங்கை பௌத்த பெண்கள் சம்மேளனம் (அனுராதபுர கிளை) விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : எப்ரிபிஏ 2 காணித்துண்டு இலக்கம் 806 மற்றும் குளம் வீதி;
கிழக்கு : குளம் வீதி மற்றும் எப்ரிபிஏ 2 காணித்துண்டு இலக்கம் 1031 இன் ஒரு பகுதி ;
தெற்கு : எப்ரிபிஏ 2 காணித்துண்டு இலக்கம்1031 இன் ஒரு பகுதி மற்றும் காணித்துண்டு இலக்கம் 813;
மேற்கு : எப்ரிபிஏ 2 காணித்துண்டு இலக்கங்கள் 813 மற்றும் 806.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**-ஐந்து (5) வருடங்கள் (2022.03.23 ஆந் திகதி தொடக்கம் 5 வருடங்கள் முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக்குத்தகை.**-பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2022 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி அடையாத பெறுமதியின் 1/ 2% வீதம் வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின், மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரரில் இக்காணி சமிதி நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும் ;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2022.03.23 ஆந் தினத்திற்கு குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகையின் நோக்கத்தை நிறைவு செய்கின்ற கீழ்க் குத்தகை அல்லது கைமாற்றம் மட்டும் அனுமதிக்கப்படும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

டி. டி. நவோத்யாசி. கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.04.25.

05- 220

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/67885.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : என்சிபி/பிஎல்சி/எல் 07/10/04/02.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், நகெனஹிர நுவரகம் பலாத பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 239, வன்னிதம்மன்னாவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வன்னித்தம்மன்னாவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் சுவடு வரைபடத்தில் இலக்கம் 2020/ நநுப/ 21 இல் காணித்துண்டு இலக்கம் 01 காட்டுவதற்கு வரையப்பட்ட சுமாரான சுவடு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.0177 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான சமிதி நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு வன்னிதம்மானாவ மரண ஆதார சமிதி விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : கற்குழி அமைந்துள்ள காணி;
கிழக்கு : சேபாலி மனம்பேரி வசிக்கும் காணி ;
தெற்கு : ஐக்கிய மரணாதார சமிதி மண்டபம் அமைந்துள்ள காணி;
மேற்கு : வீதி (பிரதேச சபை).

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.-ஐந்து (5) வருடங்கள் (2022.01.21ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2022 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி அடையாத பெறுமதியின் 1/ 2% வீதம் வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின், மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி சமிதி நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படக் கூடாது;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும் ;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட

காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

ஏ. டி. நவோத்யா சி. கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.04.25.

05- 221

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/68060.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : என்சிபி/பிஎல்சி/4/2021.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், பஹலவிலச்சிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல: 371, நவோதாகம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வன்னிஹலம்ப வெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் எப்பிபி 02 மத்திய வகுப்பு துண்டு பிரிக்கும் வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 331 இன் பகுதியாகக் காட்டுவதற்கு வரையப்பட்ட, சுவடுவரைபடத்தில் காட்டப்படுள்ள 10 ஏக்கர் 0றூட் 00 பேர்ச்சஸ்

விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை விவசாய நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு திரு. கபுரு பண்டாரகே தர்மதாச என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 323;
கிழக்கு : தந்திரிமலை பிரதானவீதி மற்றும் அதன்ஒதுக்கு ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 332;
மேற்கு : 331 ஆம் இலக்கம் காணித்துண்டின் ஒரு பகுதி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.-** முப்பது (30) வருடங்கள் (2022.03.10 தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.-** 2022 ஆம் வருடத்தின் காணியின் மதிப்பீட்டு பெறுமதியானது ரூபா ஐந்து மில்லியனையவிட (ரூபா ஐந்து மில்லியன் 5,000,000.00) குறையும் சந்தர்ப்பங்களில் பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்துக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2022 ஆம் வருடத்தின் காணியின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை விட (ரூபா ஐந்து மில்லியன் 5,000,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பத்தில் பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்பட வேண்டும் என்பதுடன் அதன் நேர் முன்னைய ஐந்து வருடத்தின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்தின் 20% கூட்டப்பட்டு குத்தகைப் பணம் அறவிடப்படவேண்டும்.

தவணைப் பணம்: தவணைப் பணம் அறவிடப்பட மாட்டாது.

ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின், மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி விவசாய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2022.03.10 ஆந் திகதியிலிருந்து 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவுசெய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் மட்டும் அனுமதிக்கப்படும்;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

டி. டி. நவோத்யா சி. கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.04.22.

06 - 207

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.